05.09.2024

S.C.No. 21/2024

PW. 1 Tr. திரு.ராஜகோபால்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரி தரப்பில்) :-**

சம்பவத்தன்று நான் வேலை போயிருந்தேனா என்றால் ஆமாம். என் தம்பியும் என்னுடன் தான் வேலைக்கு வந்திருந்தாரா என்றால் இல்லை. நான் பால்பண்ணை அருகே வேலை பார்க்கிறேனா என்றால் ஆமாம். அன்றைய தினம் நான் வேலை முடிந்து வரும்போது என் தம்பியும் என்னுடன்தான் வந்தார் என்றால் சரியல்ல. தம்பி அங்கு இருக்கிறான் என்று கேள்வி பட்டு வந்தேன். இரு சக்கர வாகனத்தில் சென்றேனா என்றால் வேலை முடிந்து வீட்டிற்கு இரு சக்கர வாகனத்தில் சென்றேன் அங்கியிருந்து தம்பி இருக்கும் இடத்திற்கு நடந்து வந்தேன். வேலை முடிந்துவிட்டு நான் தம்பியுடன் திரும்பி வந்து கொண்டிருக்கும்போது வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லியிருந்தால் அது தவறா என்றால் ஆமாம். நான் தம்பியுடன் வரவில்லை. எதிரி வேகமாக எனது தம்பியை குத்த முயற்சிக்கும்போது எனது தம்பி விலகிவிட்டாரா என்றால் ஆமாம். அவ்வாறு விலகியதால்தான் கத்தி சுவறில் குத்தியதா என்றால் ஆமாம். எனக்கும், எனது தம்பிக்கும் முன் விரோதம் உண்டு என்றால் சரியல்ல பிள்ளை மாதிரி வளர்த்தேன். பிள்ளை மாதிரி வளர்த்த என்

தம்பியை எதிரி கொலை செய்ய முயற்சிக்கும்போது நான் தடுக்கவில்லை யா என்றால் நான் தடுத்தேன். கத்தி எவ்வளவு வேகத்தில் சுவற்றில் பட்டது என்றால் கத்தியால் குத்த முயற்சிக்கும்போது கையோடு சேர்ந்து பட்டது. கத்தியின் முனை கூர்மையாக இருந்ததா என்றால் ஆமாம். அந்த கத்தியை கால் சட்டை பையில் வைத்து மறைக்க முடியுமா என்றால் முடியாது. அது மரப்பிடியுடன் சுமார் 1 அடிக்குள் இருக்கும். அந்த கத்தியை எடுத்துதான் எனது தம்பி எதிரி காலை வெட்டினாரா என்றால் ஆமாம். எதிரி காலில் என் தம்பி வெட்டி ரத்தம் வந்தவுடன் எதிரி பைக்கில் ஏறி ஓடி விட்டாரா என்றால் இல்லை அதன் பிறகு தான் கழுத்தில் ஸ்கூரு டிரைவரால் குத்தினார். அப்போதும் நாங்கள் மூவரும் சம்பவ இடத்தில் இருந்தோமா என்றால் ஆமாம். நாங்கள் மூன்று பேரும் இருந்து எனது தம்பியை காப்பாற்ற முயற்சி செய்யவில்லையா என்றால் முயற்சி செய்தேன். அப்போதும் மாறி மாறி எதிரி குத்திக் கொண்டிருந்தார். தெப்பகுளத்தின் படிக்கு முன்புறம் உள்ள தெரு விளக்கு கம்பத்தின் அருகில் தான் சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. தெப்பகுளத்திற்கு போவதற்கு முன்பாக தென்மேற்கு சந்து ஒன்று உள்ளது. அதன் அருகில் உள்ள தெரு விளக்கு அருகே சம்பவம் நடந்தது.அந்த தெருவிளக்கு அருகே ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். அதற்கு வாசல் சந்து நோக்கி உள்ளது என்றால் இல்லை அதற்கு எதிர்புறம் தான் உள்ளது. இந்த சம்பவம் சுமார் எவ்வளவு மணி நேரம் நடந்தது என்றால் 2 அல்லது 3 நிமிடங்கள் நடந்தது. நான் எத்தனை மணிக்கு எனது தம்பியை மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன் என்றால் சம்பவம் நடந்த பிறகு சுமார் 8.30 மணியளவில் கூட்டிச் சென்றேன். நான் அந்த இடத்திற்கு வந்து சுமார் 10 நிமிடம்

கழித்து எதிரி வந்தார் அதன்பிறகு சம்பவம் நடந்தது. அதன் பிறகு நான் தம்பியை மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றேன். 8.25 மணிக்கு அப்புறம்தான் சம்பவம் நடந்ததா என்றால் தோராயமாக அவ்வாறுதான் இருக்கும். 8.15 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லியிருந்தால் அது தவறா என்றால் சுமாராக அந்த நேரத்தை சொன்னேன். சரியாக குறிப்பிட்டு 8.15 மணி என சொல்லியிருந்தால் அது தவறா என்றால் நான் நேரம் பார்க்கவில்லை அந்த நேரத்தை சுமாராக சொன்னேன். எனது புகாரில் 8.15 மணி என நேரம் தெரியாமலே சொல்லியுள்ளேனா என்றால் நான் புகாரிலும் 8.15 மணியளவில் நடந்திருக்கும் என்று தான் சொல்லியுள்ளேன். சம்பவம் முடிந்து நான் எவ்வளவு நேரம் வாகனத்திற்காக காத்திருந்தேன் என்றால் 5 நிமிடத்திற்குள் இருக்கும். அதற்குள் எதிரி வண்டியை எடுத்துக் கொண்டு தப்பி ஓடி விட்டாரா என்றால் ஆமாம். நான் மருத்துவமனைக்குஎனது தம்பியை கூட்டிச் செல்வதற்காக வாகனத்திற்காக காத்திருந்தபோது அ.சா. 2 மற்றும் 3 அவர்களுடைய பைக்கில் எனது தம்பியை மருத்துவமனைக்கு கூட்டிச் செல்ல முயற்சி செய்யவில்லையா என்றால் அப்போது அவர்களிடம் பைக் இல்லை. அவர்களும் என் அருகில்தான் இருந்தார்களா என்றால் ஆமாம் கொஞ்சம் தள்ளி பயந்து போய் நின்று கொண்டிருந்தார்கள். எவ்வளவு தொலைவில் இருந்தார்கள் என்றால் சுமார் 5 அடி தொலைவில் இருந்தார்கள். மருத்துவமனைக்கு நானும், எனது தம்பியும் வண்டி ஓட்டியவரும் மட்டும்தான் போனோமா என்றால் ஆமாம். அ.சா. 2 மற்றும் 3 மருத்துவமனைக்கு வரவில்லையா என்றால் உடனடியாக என்னுடன் வரவில்லை. சுமார் எவ்வளவு நேரம் கழித்து அ.சா. 2 மற்றும் 3 வந்தார்கள் என்றால் நான் அரவிந்த்

மட்டும் மருத்துவமனையில் வைத்து பார்த்தேன். உடனே வரவில்லை சிறிது நேரம் கழித்துதான் வந்தார்கள் நான் நேரம் கவனிக்கவில்லை. நான் எவ்வளவு நேரம் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் தோராயமாக 9.45 மணி வரை இருந்தேன். மருத்துவமனையில் எனது தம்பி இறந்து விட்டதாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னார் என்றால் சுமார் 9.30 மணி இருக்கும். அது வரையிலும் எனது தம்பிக்கு காயம் பட்டதையோ, நாங்கள் மருத்துவமனை வந்ததையோ எனது வீட்டிற்கு சொல்லவில்லையா என்றால் உடனடியாக சொன்னேன். அதன்பிறகு எனது அப்பாவை கூட்டி வந்துவிட்டேன். எத்தனை மணிக்கு அப்பாவுக்கு தகவல் சொன்னேன் என்றால் 9.30 மணி இருக்கும். வேறு யாருக்கு தகவல் சொன்னேன் என்றால் எனது நண்பர் மற்றும் திருவனந்தபுரத்தில் உள்ள சொந்தக்காரர்களுக்கு சொன்னேன். எனது அப்பாவிற்கு எந்த நம்பருக்கு தகவல் சொன்னேன் என்றால் 9943155709 என்ற எண்ணுக்கு சொன்னேன். இந்த எண்ணுக்கு நான் எந்த எண்ணிலிருந்து போன் செய்தேன் என்றால் நான் இரண்டு நம்பர் பயன்படுத்துகிறேன் ஒன்று 9942899048 மற்றும் 8667609174 ஆகிய நம்பர்களிலில் இருந்து எதோ ஒரு நம்பரில் பேசினேன். இந்த இரண்டு சிம் கார்டும் ஒரே செல் போனில் தான் வைத்துள்ளேனா என்றால் ஆமாம். நான் சம்பவ இடத்தில் இருந்து போனதிலிருந்து இன்றைய தேதி வரையில் இந்த செல்போன் என் கைவசம் தான் உள்ளது என்றால் ஆமாம். 9.30 க்கு டாக்டர் காவல் நிலையத்திற்கு நான் எத்தனை மணிக்கு சென்று புகார் கொடுத்தேன் என்றால் இரவு 10 மணி இருக்கும். நான் மட்டும்தான் சென்றேனா என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் யாரிடம் தகவல்

சொன்னேன் என்றால் காவல் நிலையத்தில் ரிசப்சனில் ஒரு போலீஸ் இருந்தார் அவரிடம் தகவல் சொன்னேன். தகவல் சொல்லிவிட்டு எத்தனை மணிக்கு மருத்துவமனை சென்றேன் என்றால் நேரம் ஞாபகம் இல்லை கொஞ்ச நேரம் இருந்து விட்டு மருத்துவமனைக்கு சென்று விட்டேன். நான் எனது தம்பியை மருத்துவமனைக்கு கொண்டு சென்றது அங்கிருந்து நான் வந்தது மீண்டும் மருத்துவமனைக்கு போனது சத்தியம் மருத்துவமனை சிசிடிவி கேமராவில் பதிவாகி இருந்ததா என்றால் சத்தியம் மருத்துவமனை சிசிடிவி கேமராவில் இருந்ததா என்று தெரியவில்லை இருந்திருந்தால் பதிவாகியிருக்கலாம். காவல் நிலையத்தில் இருந்த அதிகாரி சம்பவத்தை கேள்விபட்டு மருத்துவமனைக்கு வந்து விட்டாரா என்றால் ஆமாம். அது தெரிந்து நான் மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் சரிதான். மருத்துவமனையில் என்னிடம் விவரங்களை கேட்டு அதன்பிறகு ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு எனது தம்பியின் பிரேதத்தை அனுப்பிவிட்டார்கள் என்றால் என்னிடம் விவரங்கள் கேட்டுக் கொண்டார்கள் தம்பியின் பிரேதத்தை சிறிது நேரம் கழித்துதான் அனுப்பினார்கள். என்னுடன் வந்த அஜய் நான் மருத்துவமனையில் இருக்கும்போது மருத்துவமனையில் தான் இருந்தாரா என்றால் ஆமாம். மருத்துவமனை வெளியில் அமர்ந்திருந்தார். அஜய், கிஷோர் மற்றும் அரவிந்த் இந்த மூன்று பேரும் பிரேத பரிசோதனைக்கான எந்த ஆவணங்களிலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரேத பரிசோதனையின் போது அந்த மூன்று பேரும் மருத்துவமனை வந்தார்களா என்றால் கிஷோரும், அரவிந்த் ம் அங்கு வரவில்லை. அஜய் வந்தாரா என்று ஞாபகம் இல்லை. பிரேத

பரிசோதனை முடிந்து எனது தம்பியின் உடல் நல்லடக்கம் முடியும் போது மாலை 6.00 மணி இருக்குமா என்றால் சுமாராக 6.00 மணி இருக்கும். பிரேத பரிசோதனைக்காக பஞ்சாயத்தார்களை நான் எத்தனை மணிக்கு போலீசாரின் வேண்டுகோளுக்கிணங்க கூட்டிச் சென்றேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. எனது தம்பியின் உடல் நல்லடக்க்ம் ஒழுகினசேரி சுடுகாட்டில் நடந்தது என்றால் ஆமாம். நல்லடக்கம் முடிந்து வீட்டிற்கு வரும்போது 7.30 மணி இருக்குமா என்றால் நேரம் தெரியவில்லை. 7.30 மணியாக இருந்தால் இருட்டிஇருக்கும் நான் வீட்டிற்கு திரும்பும்போது இருட்டவில்லை அதனால் அதற்கு முன்பே இருக்கும். காவல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னிடம் சத்தியம் மருத்துவமனையிலிருந்து கைப்பற்றப்பட்ட சிசிடிவி பதிவுகளை காண்ப்பித்தார்களா என்றால் இல்லை. போலீசார் எனது தம்பி அணிந்திருந்த ஆடைகளை கைப்பற்றியதை நான் சரியாக அடையாளம் காண்பித்தேனா என்றால் ஆமாம். எனக்கும், எனது தம்பிக்கும் இருந்த முன் விரோதம் காரணமாக நான் ஆத்திரத்தில் எனது தம்பியை நண்பர்களுடன் சேர்ந்து கொலை செய்து விட்டு நான் தப்பிப்பதற்காக எனது தம்பியின் நண்பர் மீது அபாண்டமாக பழி போட்டு வடசேரி காவல் நிலையத்தில் ஒரு பொய்யான புகார் கொடுத்து தற்போது இந்த நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் இந்த எதிரி எந்த குற்றச் செயலும் புரியவில்லை என்றால் சரியல்ல.